இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 314 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆனி 10 – செவ்வாய்க்கிழமை 24 ஜூன் 2025 – கோவை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 314 : Thiruvalluvar Year - 2056 - Aani 10 - Tuesday 24 June 2025 - Kovai ★★ 16 Pages ₹ 5.00

## சாலைப் பணிகள் – தரைப்பாலங்கள் – மேம்பாலங்கள் என நாடு போற்றும் வகையில்

# புதிய வரலாறு படைக்கும் நெடுஞ்சாலைத் துறை!

## முதல்வர் மு.க.ஸ்டாலினின் ‘திராவிட மாடல்’ ஆட்சியில் அடுக்கடுக்கான சாதனைகள்!

**சென்னை, ஜூன் 24-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் சாலைத் திட்டங்கள் - மேம்பாலப் பணிகளால் இந்தியாவில் தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறையிலும் சிறந்த மாநிலம் எனப் புதிய வரலாறு படைக்கிறது.**

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குச் சாலை வசதிகள் மிக மிக முக்கியமாகும். அமெரிக்க நாட்டின் குடியரசுத் தலைவராகத் திகழ்ந்த ஜான் எப். கென்னடி அவர்கள், “அமெரிக்க நாட்டுப் பொருளாதார முன்னேற்றத்திற்கு இந்நாட்டின் பயன்படும் சாலை வசதிகள் சிறப்பாக அமைந்திருப்பதே காரணம்” என்று ஒருமுறை குறிப்பிட்டாராம். தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்திடும் நோக்கில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டில் சாலை வசதிகளைப் பெருக்கிட இணைப்புச் சாலைத் திட்டம். தமிழ்நாடு அரசின்கீழ் தனித்துறையாக நெடுஞ்சாலைத் துறை, நெடுஞ்சாலைத் துறைக்கெனத் தனி அமைச்சர் முதலிய பலவற்றை உருவாக்கி, நெடுஞ்சாலைத்துறையில் தமிழ்நாடு சிறந்த மாநிலம் எனப் புகழ்பெறச் செய்தார்.

**தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட நாயகர் ஆட்சியில் நெடுஞ்சாலைத் துறையின் முத்திரைகள் முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டம்**

2021 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 3,858 கோடி மதிப்பீட்டில் 448 கி.மீ. நீளமுள்ள நான்கு வழித்தட சாலைகள், ரூ.2,207 கோடி மதிப்பில் 1,681 கி.மீ. நீளமுள்ள இரு வழித் தட சாலைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன தொடர்ந்து ரூ.2,807 கோடி மதிப்பீட்டில் 383 கி.மீ. நீளமுள்ள நான்கு வழித்தட சாலைப் பணிகளும், ரூ.709 கோடி மதிப்பீட்டில் 357 கி.மீ. நீளமுள்ள இரு வழித்தட சாலைப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

**ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம்**

ரூ.17,154 கோடி மதிப்பீட்டில் 9,620 கி.மீ நீளமுள்ள சாலைப் பணிகள் மற்றும் ரூ.1,161 கோடி மதிப்பீட்டில் 996 பாலம் / சிறு பாலப் பணிகள் நிறைவடைந்துள்ளன. ரூ.731 கோடி மதிப்பில் 164 கி.மீ. நீளத்திற்கு நகர்ப்பகுதி மேம்பாட்டுப் பணிகள் நிறைவடைந்துள்ள.

ரூ.2,074 கோடி மதிப்பீட்டில் சாலை ஓடுதளப் பாதை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 6,805 கி.மீ. நீளச் சாலைகளில் ஓடுதளப் பரப்பினை மேம்படுத்தும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.




ரூ.662 கோடி மதிப்பீட்டில் 1,652 சாலைப் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்துள்ளன.

**புறவழிச்சாலை / இணைப்புச் சாலைகள்**

ரூ.307.8 கோடி மதிப்பீட்டில் மண்ணச்சநல்லூர் (கட்டம் 1) இலுப்பூர், பார்த்திபனூர், ராசிபுரம் கட்டம் 1 பிரிவு-2, திருத்துறைப்பூண்டி கட்டம்-1 பவானி கட்டம் II, முதுகளத்தூர், திருத்தணி, குன்னூர் மற்றும் நாமக்கல் கட்டம் I ஆகிய பத்து புறவழிச்சாலை திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

ரூ.20.85 கோடி மதிப்பிட்டில் ஈரோடு மாவட்டம் வில்லரசம்பட்டி வழியாக திண்டல் சந்திப்பிலிருந்து கனிராவுத்தர்குளம் செல்லும் சாலை, ரூ.1.97 கோடி மதிப்பீட்டில் ஜவான்ஸ் பவன் சாலை, ரூ.41.89 கோடி மதிப்பீட்டில் பசுமலையில் இணைப்புச்சாலைப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

ரூ.4,907.17 கோடி மதிப்பீட்டில் 5,064.53 கி.மீ நீளமுள்ள ஊராட்சி / ஊராட்சி ஒன்றிய சாலைகள் மாவட்ட இதர சாலைகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

**ரூ.1,330.70 கோடி பன்னாட்டு நிதி உதவியுடன் கூடிய திட்டங்கள்**

சென்னை-கன்னியாகுமரி தொழில்தடத் திட்டத்தின் கீழ், ரூ.240.06 கோடி மதிப்பீட்டில் நக்க சேலம், குரும்பலூர் புறவழிச்சாலைகளுடன் கூடிய துறையூர் பெரம்பலூர் சாலை, ரூ.349.94 கோடி மதிப்பீட்டில் மோகனூர் நாமக்கல். சேந்தமங்கலம் ராசிபுரம் சாலை, ரூ.251.29 கோடி மதிப்பீட்டில் விருத்தாச்சலம் உளுந்தூர்பேட்டை சாலை, ரூ.238.90 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர் - மன்னார்குடி சாலை, ரூ.250.51 கோடி மதிப்பீட்டில் மேலூர் திருப்பத்தூர் சாலை ஆகிய 5 சாலைப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–II**

இத்திட்டத்தின் கீழ் ரூ.129.94 கோடி மதிப்பீட்டில் விருத்தாச்சலம் பரங்கிப்பேட்டை சாலை ரூ. 144.64 கோடி மதிப்பீட்டில் ஓமலூர் மேச்சேரி சாலை. ரூ.104.70 கோடி மதிப்பீட்டில் சித்தோடு ஈரோடு சாலை, ரூ.176.58 கோடி மதிப்பீட்டில் திருநெல்வேலி செங்கோட்டை கொல்லம் சாலை ஆகிய 4 சாலைப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**ஆறு வழித்தடச் சாலையாக மேம்பாடு தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின் கீழ்,**

வண்டலூர்.வாலாஜாபாத் சாலை நான்கு வழித் தடத்திலிருந்து ஆறு வழித் தடச் சாலையாகரூ. 180.09 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

**ரூ.1372 கோடி மதிப்பீட்டில் 1049 தரைப்பாலங்கள் உயர்மட்டப் பாலங்களாக மாற்றப்பட்டுள்ளன:**

அவற்றுள் முக்கியமானவை:

ரூ.17.04 கோடி மதிப்பீட்டில் திருவண்ணாமலை மாவட்டம், தண்டரை எரையூர் சாலை, செய்யாறு ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம்,

ரூ.90.96 கோடி மதிப்பீட்டில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கல்லணையில் உயர்மட்டப் பாலம்!

ரூ.27.92 கோடி மதிப்பீட்டில் பெண்ணையாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம்.

ரூ.58.64 கோடி மதிப்பீட்டில் சென்னையில், திருவொற்றியூர்- பொன்னேரி-பஞ்செட்டி சாலையில் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே உயர்மட்டப் பாலம்.

ரூ.21.56 கோடி மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் காஞ்சிபுரம் சாலையில் செய்யாறு ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம்.

ரூ.33.76 கோடி மதிப்பீட்டில் ஈரோடு மாவட்டம் கீழ்பவானி கால்வாயின் குறுக்கே 8 உயர் மட்டப் பாலங்கள்.

ரூ.18.57 கோடி மதிப்பீட்டில் திருத்தணி-நாகலாபுரம் சாலையில் கொசத்தலையாறு ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம்.

ரூ.19.48 கோடி மதிப்பீட்டில் பருத்திப்பட்டில் கூவம் ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம்.

ரூ.11.06 கோடி மதிப்பீட்டில் காலகம் ஆவுடையார்கோவில் சாலையில் மருதங்குடி ஆற்றின் குறுக்கே உயர் மட்டப் பாலம்.

ரூ.13.60 கோடி மதிப்பீட்டில் மன்னார்குடி-சேதுபாவசத்திரம் சாலையில் மகாராஜா சமுத்திரம் ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம்.

ரூ.19.00 கோடி மதிப்பீட்டில் மன்னடிமங்கலம் மற்றும் இரும்பாடி இடையில் வைகை ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம்.

ரூ.36.50 கோடி மதிப்பீட்டில் சித்தூர்- திருத்தணி சாலையில் உயர்மட்டப்பாலம் முதலிய தரைமட்டப் பாலங்கள் உயர்மட்டப் பாலங்களாகக் கட்டப்பட்டுள்ளன.

**நபார்டு கடனுதவி மற்றும் மாநில நிதியுதவி திட்டத்தின் கீழ்** நபார்டு அலகின் மூலம் ரூ1137.62 கோடி மதிப்பீட்டில் 278 பாலங்கள் கட்டப்பட்டுள்ளன.

**ரூ.813.25 கோடியில் 8 சாலை மேம்பாலங்கள்:**

ரூ.93.50 கோடி மதிப்பீட்டில் கோயம்பேடு ஜவஹர்லால் நேரு சாலையில் காளியம்மன் கோயில் தெரு மற்றும் சென்னை புறநகரப் பேருந்து நுழைவு வாயில் சந்திப்பில் மேம்பாலம்!

ரூ.67.00 கோடி மதிப்பீட்டில் வேளச்சேரி-விஜயநகரம் சந்திப்பில் தரமணி இணைப்புச் சாலையிலிருந்து வேளச்சேரி புறவழிச்சாலை செல்லும் இரண்டாம் அடுக்கு பாலப்பகுதிப் பணி



மற்றும் ரூ.78.49 கோடி மதிப்பில் வேளச்சேரி புறவழிச்சாலையிலிருந்து வேளச்சேரி - தாம்பரம் சாலையை இணைக்கும் முதல் அடுக்கு பாலப்பகுதிப் பணி!

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்

## 1000க்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்பு!

# ரூ.4,302 கோடியில் ஓலா செல் டெக்னாலஜி நிறுவனம்!

## கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளியில் அமைகிறது!

சென்னை, ஜூன் 24 -

தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளுக்கான உகந்த சூழ்நிலை உள்ள காரணத்தால் மேலும் மேலும் தொழில் முதலீடுகளுடன் தொழில் நிறுவனங்கள் வந்த வண்ணம் உள்ளன.

அந்த வகையில் கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளியில் ரூ.4,302 கோடி முதலீட்டில் 1000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் வண்ணம் ஓலா செல் டெக்னாலஜி நிறுவனம் வர இருக்கிறது.

**ரூ.4,302 கோடியில் ஆலை விரிவாக்கம்!**

இதுகுறித்த விவரம் வருமாறு:-

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளியில் 4 ஆயிரத்து 302 கோடியில் ஓலா செல் டெக்னாலஜிஸ் தனது ஆலையை விரிவாக்கம் செய்ய, தமிழ்நாடு அரசிடம் விண்ணப்பித்துள்ளது.

தமிழ்நாட்டை 2030 ஆம் ஆண்டுக்குள் ஒரு லட்சம் கோடி அமெரிக்க டாலர் பொருளாதாரம் கொண்ட மாநிலமாக மாற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இலக்கு நிர்ணயித்துள்ளார்.

இதற்காக பல்வேறு முயற்சிகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது. ஐக்கிய அரபு அமீரகம், சிங்கப்பூர், ஜப்பான், ஸ்பெயின் உள்ளிட்ட நாடுகளை சேர்ந்த நிறுவனங்கள் தமிழ்நாட்டில் பல்வேறு முதலீடுகளை குவித்து வருகின்றன.

இந்நிலையில், கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளியில் 4 ஆயிரத்து 302 கோடி ரூபாயில் ஓலா செல் டெக்னாலஜிஸ் தனது ஆலையை விரிவாக்கம் செய்ய உள்ளது.

அதன்படி, சிப்காட் பார்கூர் பூங்காவில் ஓலா செல் டெக்னாலஜிஸ் தனது ஆலையை விரிவாக்கம் செய்ய, தமிழ்நாடு அரசிடம் விண்ணப்பித்துள்ளது. ஏற்கனவே, 998 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொழிற்சாலைக்கான முதல்கட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது முழுமையாக கட்டுமான பணிகளை மேற்கொள்ளும் வகையில் தொழிற்சாலையை விரிவாக்கம் செய்ய ஓலா நிறுவனம் முடிவு செய்துள்ளது.

ஓலா நிறுவனத்தின் இந்த தொழிற்சாலை விரிவாக்கம் மூலம் கூடுதலாக 3 ஆயிரத்து 850 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நீலகிரி மாவட்டம் – உதகமண்டலம்

# ரயில் நிலையத்தில் அதிகரித்து வரும் ‘இந்தி’ பயன்பாட்டை தவிர்ப்பீர்!

## ஒன்றிய ரயில்வே அமைச்சருக்கு ஆ.இராசா எம்.பி. கடிதம்!

*நீலகிரி, ஜுன் 24-*

*நீலகிரியில் உதகமண்டலம் ரயில் நிலையத்தில் அதிகரித்து வரும் இந்தி பயன்பாடு குறித்து ஒன்றிய ரயில்வேத் துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவுக்கு ஆ.இராசா எம்.பி. எழுதியுள்ள கடிதம் வருமாறு:-*

*ரயில் நிலையத்தில் அதிகரித்து வரும் இந்தி பயன்பாடு மற்றும் முக்கியத்துவம் குறித்து ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தவே நான் எழுதுகிறேன், இது பரவலான கவனத்தையும் எதிர்ப்பையும் தூண்டியது.*

*எனது தொகுதியான நீலகிரியில், உதகமண்டலம் ரயில் நிலையம் 100 ஆண்டுகளுக்கும் மேலானது.*



*அமிர்த பாரத் திட்டத்தின் கீழ், நிலையத்தை மேம்படுத்தும் பணிகள் செயல்பாட்டில் உள்ளன. 90% பணிகளை மட்டுமே முடித்த நிலையில், தமிழ் மக்களின் உணர்வுகளைப் பாதித்த பதாகைகள் சுவரில் உள்ளன.*

*தமிழ்நாடு மொழி அடையாளம் மற்றும் கலாச்சார சுயாட்சியின் நீண்ட மற்றும் பெருமை மிக்க வரலாற்றைக் கொண்டுள்ளது. நமது பிராந்தியத் தேவைகள் மற்றும் வரலாற்று சூழலுக்கு ஏற்ப இரு மொழிக் கொள்கையை நமது மாநில மக்கள் தொடர்ந்து ஆதரித்து வருகின்றனர்.*

*உதகமண்டலம் ரயில் நிலையத்தில் சமீபத்தில் நடந்த செயல் மொழியியல் திணிப்பாகக் கருதப்படுகிறது. பொது இடங்களில் இந்தி மொழியை ஊக்குவிப்பது உள்ளூர் மக்களின் மொழியியல் தேவைகளிலிருந்து துண்டிக்கப்பட்டதாக உணர்கிறது மற்றும் இது ஒரு அரசியல் கூற்றாகக் கருதப்படுகிறது. ரயில் நிலையத்தில் மதன் மோகன் மாளவியாவின் பெயரில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்கோள் தமிழ் கவிஞர் மகாகவி பாரதியால் கூறப்பட்டது.*

*மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, தமிழக மக்களின் மொழி உணர்வுகளை மதிக்கவும், சூழல் ரீதியாக அவசியமில்லாத இடங்களில் இந்தி மொழியை கட்டாயமாகச் சேர்ப்பதைத் தவிர்க்கவும் கேட்டுக் கொள்கிறேன்.*

*அந்த பதாகைகளை அகற்ற அதிகாரிகளுக்கு நீங்கள் உத்தரவிட முடிந்தால் நான் நன்றியுள்ளவனாக இருப்பேன்.*

*இவ்வாறு ஆ.இராசா எம்.பி. தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.*